**முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், கோயமுத்தூர்**

முன்னிலை: திருமதி.A.P. லதா, பி.எஸ்.ஸி., பி.எல்.,

முதன்மை தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.

செவ்வாய் கிழமை, 7ம் நாள், ஏப்ரல் மாதம் 2026ம் வருடம்.

தொழிற்தாவா எண்.72/2025

(CNR No.TNCB04-000167-2025)

நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள்

பாதுகாப்பு தொழிற்சங்கத்திற்காக அதன்

மாநில பொது செயாளர்

M.அன்புராஜ். ….. மனுதாரர்

~ எதிராக ~

நிர்வாகம்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

கோவை கோட்டம் - I,

கோவை. ... எதிர்மனுதாரர்

இந்த வழக்கு கடந்த 02.04.2026ம் தேதியன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி.K.கன்னிகா சங்கரேஸ்வரி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு கோப்புக்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் எனது பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் :-

தீர்வம்

மனுதாரர் தொழிற்சங்கம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக தொழிற் தகராறு சட்டம் 1947 பிரிவு 2(K)ன் கீழ் கோவை தொழிலாளர் அலுவலர் முன்பாக ஒரு மனு தாக்கல் செய்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை

லிமிடெட்) கோவை என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் திரு.R.மதுரைவீரன், ஓட்டுநருக்கு (பணி எண்.சி29136) ஜுன் 2020ம் மாதம் சம்பள சிலிப்பில் 03 நாட்கள் ஊதியமில்லா விடுப்பு நாட்களை சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாட்கள் ஊதியத்தை திரும்ப வழங்க வேண்டுமாறும், கோரியிருந்த மனுவானது தொழிற்தாவா விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது சமரசம் ஏற்படவில்லை என்பதால் 08.03.2022 மற்றும் 21.07.2023ம் தேதிகளில் சமரச அதிகாரி தனது சமரச முறிவு அறிக்கையை மாநில அரசுக்கு சமர்பித்தார். அதனை ஏற்றுக் கொண்ட தமிழக அரசு கீழ்கண்ட எழுவினாவிற்கு பதில் அளிக்க இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

G.O. (D) No.211 Labour and Employment (D-1)
Department, dated 15.03.2024.

<u>எழுவினா</u>

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை லிமிடெட்) கோவை என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் திரு.R.மதுரைவீரன், ஓட்டுநருக்கு (பணி

எண்.சி29136) ஜுன் 2020ம் மாதம் சம்பள சிலிப்பில் 03 நாட்கள் ஊதியமில்லா விடுப்பு நாட்களை சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாட்கள் ஊதியத்தை திரும்ப வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்".

2. மனுவின் சுருக்கம் :

மனுதாரர் சங்கம் தொழிற்சங்க சட்டப்படி பதிவு செய்யப்பட்டதும், எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி சார்பற்ற அமைப்பாகும். மனுதாரர் சங்கம் தொழிலாளர் நலனையும், நிறுவன நலனையும் பாதுகாக்க உறுதிகொண்டு செயல்பட்டு வரும் ஒரு தொழிற்சங்க அமைப்பாகும். எதிர்மனுதாரர் நிறுவனம் தமிழக அரசால் ஏற்று நடத்தப்பட்டு வரும் ஒரு போக்குவரத்து நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் அரசு சார்ந்த நிறுவனமாக இருந்த போதிலும், தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க தவறியும், தொழிற்சங்கம் வேறுபாடுகளை மனதில் கொண்டு

ஆளுங்கட்சி தொழிற்சங்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மற்ற தொழிற்சங்க செயல்பாடுகளை நசுக்குவதை ஒரு பணியாக கொண்டு, ஆளும் கட்சி அல்லாத தொழிற்சங்க உறுப்பினர்களை நடவடிக்கை என்ற பெயரில் பல்வேறு தொந்தரவுகளை கொடுத்து செயல்பட்டு வருகிறது.

3. சங்க உறுப்பினர் திரு.R.மதுரைவீரன், சுங்சம்-1 கிளையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் சங்க உறுப்பினர் திரு.R.மதுரைவீரன், ஜுன் மாத 2020 மாத சம்பளம் சிலிப்பில் ஊதியமில்ல விடுப்பு 3 நாட்கள் அனுமதியின்றி சம்பளம் பிடித்துக் கொண்டு வழங்கப்பட்டுள்ளது கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும், கொரோனா தொற்று நோய் காரணமாக தமிழக அரசானது தமிழகம் முழுவதும் ஊரடங்கு பிறப்பித்து, பேருந்துகள் எதுவும் இயங்காத நிலையில் பணியாளர்களுக்கு முழுமையான சம்பளம் வழங்க வேண்டும் என்பதையும் மீறி, சங்க உறுப்பினரின் 3 நாட்கள் ஊதியமில்லா விடுப்பாக கருதி சம்பளம் பிடித்து 3 நாட்கள் கழித்து சம்பளம் வழங்கியது சகல சட்ட

விதிமுறைகளுக்கு எதிரானதாகும். ஆகவே சங்க உறுப்பினரின் அனுமதியின்றியும், தமிழக அரசு நெறிமுறைகளை மீறியும், ஊரடங்கு காலத்தில் சங்க உறுப்பினரின் 3 நாட்கள் ஊதியமில்லா விடுப்பாக கருதி சம்பளம் பிடித்து வழங்கியதை ரத்து செய்தும், தமிழக அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கியதை போல சங்க உறுப்பினருக்கும் சிறப்பு விடுப்பாகக் கருதி சங்க உறுப்பினரிடம் பிடித்தம் செய்த ஊதியத்தை திரும்ப சங்க உறுப்பினரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும்.

4. மனுதாரர் சங்கம் தனது சங்க உறுப்பினரின் நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு 2(கே)ன் கீழ் ஒரு கோரிக்கை மனுவினை தொழிலாளர் அலுவலர் கோவை முன்பாக சமர்ப்பித்தது. அந்த மனு ந.க.எண்.618/2020 என்ற எண்ணாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையில் கலந்து கொண்ட எதிர்மனுமாரர், சங்க உறுப்பினர் கோரிக்கை குறித்து நேரடியாக பதில் சமர்ப்பிக்காமல் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை

கூறியிருந்தது. அதில் 01.06.2020 முதல் 30.06.2020 வரை 50% பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டன. சங்க உறுப்பினருக்கு கடந்த காலங்களில் சராசரியாக 04 நாட்கள் மட்டுமே வருகை பதிவு உள்ளதால், நிலுவையில் உள்ள விடுப்பினை கழித்து சம்மந்தப்பட்ட மாதத்தில் முழு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. எனவே பிடித்தம் செய்த 03 நாட்களை ஊதியமில்லா விடுப்பினை திரும்ப சங்க உறுப்பினருக்கு வழங்க வழிவகை இல்லை என தெரிவித்திருந்தார். ஆனால் இது குறித்து எந்த அறிவிப்பும் வழங்கவில்லை. மேலும், விசாரணை போன்ற வாய்ப்புகளும் வழங்கவில்லை. இதிலிருந்து சட்டத்திற்கு புறம்பாக 01.06.2020 முதல் 30.06.2020 வரை முறையாக எவ்விதமான அறிவிப்புமின்றி விடுப்பு பிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. ஆகவே அரசாணைப்படி கோரிக்கை முழுமையாக அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், எதிர்மனுதாரர் இந்த நடவடிக்கையினால் சங்க உறுப்பினரின் சர்வீஸ் காலம் பாதிக்கப்படுவதுடன் பண இழப்பும் ஏற்படுகிறது. எதிர்மனுதாரரின் சட்டவிரோத நடவடிக்கையினை

இந்நீதிமன்றத்தின் உத்தரவின் மூலமே தடை செய்ய முடியும் என்பதால் திரு.R.மதுரைவீரன், ஓட்டுனர் (பணி எண்.C29136) என்பவருக்கு ஜூன் 2020 மாதம் பிடித்தம் செய்த 03 நாட்கள் ஊதியமில்லா விடுப்பினை சிறப்பு விடுப்பாகக் கருதி 03 நாட்கள் ஊதியத்தை திரும்ப அவருக்கு வழங்கி உத்தரவு பிறப்பிக்கமாறும், இந்த கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :

மனு சட்டபடி நிலைக்கத்தக்கதல்ல. சங்க உறுப்பினர் திரு.R.மதுரைவீரன், ஓட்டுனர் (பணி எண்.C29136) என்பவர் சுங்கம்-1 கிளையில் ஓட்டுனராக பணிபுரிந்து வந்தார். சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகம் கொரானா தொற்று பாதிப்பு ஏற்பட்ட காலகட்டத்தில் அரசு உத்தரவு படி 01.06.2020 முதல் 30.06.2020 வரை 50% விழுக்காடு பொது பேருந்துகள் இயக்கப்பட்டது. பின்னர் 01.07.2020 முதல் 31.08.2020 வரை கொரோனா தொற்று காரணமாக முழு இயக்கம் நிறுத்தப்பட்டது. பின்னர் 01.09.2020 முதல் 06.09.2020 வரை

மாவட்டங்களுக்குள் மட்டும் பேருந்து இயக்கப்பட்டது. கொரோனா கால கட்டத்தில் பொது மக்களின் அத்தியாவசிய தேவையான பொது போக்குவரத்து இயக்கம் அரசு உத்தரவுப்படி குறைவான பேருந்துகளை இயக்கிய போது. எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் சுழற்சி முறையில் பணிக்கு வர அறிவிப்பு பலகை மூலம் தகவல் தெரிவிக்கப்படும், பணி வழங்கப்பட்டும் மற்ற நாட்களுக்கு வருகை பதிவில் 'H' (holiday) எனவும் பதிவு செய்யப்பட்டது. மேலும், கொரானா தொற்றின் காரணமாக ஊரடங்கு இருந்த நிலையில் பேருந்துகள் இயக்கப்படாத காரணத்தினால் பணியாளர்கள் பணிக்கு வராத நிலையிலும் சம்பளம் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த காலங்களில் பணியாளர்கள் சம்பளம் பெற்ற நாட்கள் மட்டும் கணக்கில் எடுக்கப்பட்டதில், சில பணியாளர்கள் அதிக அளவு விடுப்பு துய்த்தும் மற்றும் விடுப்புகள் இல்லாத காரணத்தினால் சம்பளமில்லா விடுப்பிலும் இருந்துள்ளார்கள். நிர்வாகத்தின் நிதி நிலைமை காரணத்தினாலும் அரசின் நிதிச்சுமை குறைக்கும் நோக்கோடு

பணியாளர்களின் ஒரு வருட வருகைப்பதிவின் சராசரியை கணக்கிட்டு இந்த வகை தொழிலாளர்களுக்கு மட்டும் ஊதியமில்லாத நாட்களையும், பணிக்கு வராத நாட்களையும் கணக்கில் கொண்டு முழுமையாக சம்பளம் பெற்ற நாட்களை மட்டும் சராசரியாக எடுத்து முழுமையாக சம்பளம் வழங்கப்பட்டது.

6. மேலும், அவ்வாறான பணியாளர்களை வரிசைப்படுத்துகையில் ஷை பணியாளர் ஜூன் 2020ம் மாதத்தில் 50% சதவிகித பணியாளர்கள் சுழற்சி முறையில் பணிக்கு வரவழைக்கப்பட்டு 50% பேருந்துகள் இயக்கப்பட்டன. இதன்படி கிளையிலிருந்து சங்க உறுப்பினர் 04 நாள் வருகை, 24 நாட்களுக்கு 'H' மற்றும் 03 நாட்கள் ஊதியமில்லா விடுப்பு எனவும், வருகைப்பதிவு பெறப்பட்டதை தொடர்ந்து சங்க உறுப்பினருக்கு 28 நாட்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கொரானா பாதிப்பு ஏற்பட்ட சூழ்நிலையில் பேருந்துகள் முழுவதும் தடை செய்யப்பட்ட நிலையில், வருமானமே இல்லாத நிலையில் சங்க உறுப்பினருக்கு ஊதிய இழப்பு ஏற்படுத்த கூடாது என்ற நிலையில் சங்க உறுப்பினருக்கு நிர்வாகம்

ஊதிய இழப்பு ஏற்படுத்தவில்லை. மேலும், எதிர்மனுதாரர் நிர்வாகம் ஒரு பொது சேவை நிறுவனம் ஆகும். இதில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் ஒரே மாதிரியான நிலைபாடு கொண்டு வேறுபாடு இல்லாமல் சம்பளம் பிரதி மாதம் வழங்கி உள்ளது.

7. மேலும் 01.06.2020 முதல் 30.06.2020 வரை 50% பேருந்துகள் இயக்கப்பட்டன. சங்க உறுப்பினருக்கு கடந்த காலங்களில் குறைந்தபட்சம் சராசரியாக 04 நாட்கள் மட்டுமே வருகை பதிவு உள்ளதால் நிலுவையிலுள்ள விடுப்பினை கழித்து சம்பந்தப்பட்ட மாதத்தில் முழு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. அதை ஏற்றுக்கொண்டு முழு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. எனவே பிடித்தம் செய்த 03 ஊதியமில்லா விடுப்பு நாட்களை திரும்ப சங்க உறுப்பினருக்கு வழங்க வழி வகை இல்லை. மேலும் மனுதாரர் சங்கம் கூறுவது போல எதிர்மனுதாரர் சங்க உறுப்பினருக்கு எதிராக சட்ட விதிகளுக்கு புறம்பாகவோ, கழக நிலையாணைகளுக்கு புறம்பாகவோ, வேண்டுமென்றே பழிவாங்கும்

நோக்கத்தோடோ, செயல்படவில்லை. எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

8. <u>தீர்வு காண வேண்டிய பிரச்சனை</u> :

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை லிமிடெட்) கோவை என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் திரு.R.மதுரைவீரன், ஓட்டுநருக்கு (பணி எண்.சி29136) ஜுன் 2020ம் மாதம் சம்பள சிலிப்பில் 03 நாட்கள் ஊதியமில்லா விடுப்பு நாட்களை சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாட்கள் ஊதியத்தை திரும்ப வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? இல்லையா?

9. சான்றாவணமும், சாட்சியமும் :

மனுதாரர் தரப்பில் மனுதாரர் திரு.R.மதுரைவீரன், தொ.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, தொ.சா.ஆ.1 முதல் தொ.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம்

இல்லை, மற்றும் எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் மனுதாரரின் குறுக்கு விசாரணையின் போது குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. தீர்வு :

இரு தரப்பும் கேட்கப்பட்டது. தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஆய்ந்து பரிசீலனை செய்யப்பட்டது. சங்க உறுப்பினர் தரப்பில் எவ்வித அறிவிப்பும் இன்றி ஜுன் மாதம் 2020ம் ஆண்டு அன்று வழங்க வேண்டிய சம்பளத்தில் 3 நாட்கள் ஊதியமில்லா விடுப்பு நாட்களை சிறப்பு விடுப்பாகக் கருதியது சட்டத்திற்கு புறம்பானது என்றும் வாதுரை முன்னிலை செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் 01.06.2020 முதல் 30.06.2020 வரை சுமார் 50% பேருந்துகள் இயக்கப்பட்டது எனவும், சங்க உறுப்பினருக்கு கடந்த காலங்களில் குறைந்த பட்சம் சராசரியாக 4 நாட்கள் மட்டும் வருகை பதிவேடு உள்ளதாலும், நிர்வாகத்தின் நிதிநிலையை கருத்தில் கொண்டும், சங்க உறுப்பினரின் நிலுவையில் உள்ள விடுப்பிலிருந்து 3 நாட்கள் விடுப்பு நாட்களாக கழித்து, முழு சம்பளம்

வழங்கப்பட்டது எனவும், எனவே, சங்க உறுப்பினரின் கோரிக்கை நிலைக்கத்தக்கதல்ல எனவும் வாதுரை முன்னிலை செய்யப்பட்டது.

11. சங்க உறுப்பினரின் கோரிக்கை என்னவென்றால், எவ்வித அறிவிப்பும் வழங்காமல் ஊரடங்கு காலத்தில் ஜுன் மாதம் 2020ம் ஆண்டில் 3 நாட்கள் ஊதியமில்லா விடுப்பு நாட்களாகக் கருதப்பட்டது என்பதாகும். சங்க உறுப்பினரின் விடுப்பு கணக்கிலிருந்த 3 நாட்கள் பிடித்தம் செய்ததற்கு எந்த அறிவிப்பும் கொடுத்ததாக எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணம் தாக்கல் செய்யப்படவில்லை. அறிவிப்பு கொடுக்காமல் அவ்வாறு சங்க உறுப்பினரின் அனுமதியில்லாமல் அல்லது தொழிற்சங்கங்களின் ஒப்புதல் இன்றி இவ்வாறு பிடித்தம் செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்பதில் ஐய்யப்பாடில்லை. எதிர்மனுதாரரின் இச்செய்கையை குறித்து சங்க உறுப்பினர் 03.08.2020ம் நாளிட்ட தொ.சா.ஆ.2 கடிதம் அனுப்பியதாக குறிப்பிட்டு அந்த கடிதத்தை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு ஒரு கடிதம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்படவில்லை என

எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தொ.சா.ஆ.2 கடிதத்தை எதிர்மனுதாரருக்கு அனுப்பியதற்கு சங்க உறுப்பினர் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. கோரிக்கை மனுவிலும், தொ.சா.ஆ.1 அரசு செயலாளருக்கு அனுப்பிய கடிதத்திலும், தொ.சா.ஆ.4/2கே பிரிவின் கீழான மனுவிலும், 03.08.2020ம் தேதியிட்ட கடிதம் அனுப்பியதாக குறிப்பிடப்படவில்லை. எனவே, தொ.சா.ஆ.2 கடிதம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதாக முடிவு செய்கிறேன்.

12. சங்க உறுப்பினர் சங்கத்தை அணுகுவதற்கு முன்பாக தனக்கு வேலை அளிப்பவரான எதிர்மனுதாரருக்கு கடிதம் வாயிலாக கோரிக்கையை அனுப்பி அவருடைய பதில் பெற்ற பின்னர் பதில் திருப்திகரமாக இல்லாத பட்சத்தில், அல்லது பதில் அளிக்காத பட்சத்தில் சங்கம் வழியாக மேல் நடவடிக்கை தொடரலாம். இவ்வழக்கில் மனுதாரர் சங்கத்திற்கு எந்த கோரிக்கை மனுவும் அனுப்பப்படாமல் சங்கம் தன்னிச்சையாக மனுதாக்கல் செய்திருப்பது

ஏற்பபுடையதாக இல்லை. சங்க உறுப்பினரின் வேண்டுகோள் மனுவின் அடிப்படையில் சங்க உறுப்பினருக்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமே தவிர சங்கம் தன்னிச்சையாக செயல்படக்கூடாது. இத்தாவாவில் சங்க உறுப்பனிரின் வேண்டுகோள் இன்றி தன்னிச்சையாக சங்கம் செயல்பட்டிருப்பது ஏற்புடையதாக இல்லை.

13. மதுரைவீரன் ஓட்டுநர் சங்கத்தின் உறுப்பினர் என்பதற்கு எந்த ஆவணமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. சங்க உறுப்பினரின் வேண்டுகோளின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்வதற்கு சங்கத்தின் தீர்மானம் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தொ.சா.ஆ.4ல் சங்க உறுப்பினர் சார்பாக நிர்வாகத்தின் முன்பு சங்கம் கோரிக்கை வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எந்த கோரிக்கை கடிதமும், சங்கத்தின் சார்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, இந்த தாவாவைப் பொறுத்தவரையில், மேலே குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் காணப்படுகின்றது என்பதாக காண்கிறேன். சங்க

உறுப்பினரும், தொழிற்சங்கங்களும், மேலே குறிப்பிட்டுள்ள கருத்துக்களை கருத்தில் கொண்டு வழக்கு நடவடிக்கைகள் தொடர வேண்டும் என்பதாக இந்நீதிமன்றம் உத்தரவு இடுகின்றது.

14. மேலே உள்ள குறைபாடுகள் இந்த வழக்கில் காணப்பட்டாலும், அந்த குறைபாடுகளின் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாக எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரையில் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் இக்குறைபாடுகளினால் சங்க உறுப்பினரின் கோரிக்கை சட்டத்திற்கு புறம்பானது என்பதாக கருத இயலாது. ஈட்டிய விடுப்பு என்பது தொழிலாளியின் சட்டப்படியான உரிமையாகும். அந்த உரிமையை மாற்றுவதற்கு எதிர்மனுதாரர் தொழிற்தாவா சட்டம் பிரிவு 9A மற்றும் அட்டவணை IV பிரிவின் 5ன்படி அறிவிப்பு தொழிலாளிக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் இவ்வழக்கில் எந்தவித அறிவிப்பும் மனுதாரர் சங்க உறுப்பினருக்கு வழங்கவில்லை. சங்க உறுப்பினருக்கு எவ்வித அறிவிப்பும் வழங்காமல் அவருடைய விடுப்பு கணக்கில்

3 நாட்கள் தன்னிச்சையாக நிர்வாகம் கழித்துள்ளது. தொ.சா.ஆ.3 ஜூன் 2020 சம்பளப் பட்டியலை பார்வையிடுகையில் சங்க உறுப்பினரின் விடுப்புக் கணக்கிலிருந்து பணிக்கு வராத நாட்கள் 3 நாட்களாகக் கழிக்கப்பட்டது தெரியவருகின்றது. ஆனால் அந்த மாதத்திற்கு முழுச் சம்பளம் எதிர்மனுதாரர் சங்க உறுப்பினருக்கு வழங்கியுள்ளார். சங்க உறப்பினரின் கணக்கிலிருந்து 3 நாட்களை ஊதியமில்லா விடுப்பு நாட்களாகக் கழித்தது எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு கழித்ததற்கு சங்க உறுப்பினரின் அனுமதியோ அல்லது தொழிற்தகராறு 9Aன் படியான அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் அந்த காலக் கட்டத்தில் 50% பேருந்துகள் இயக்கப்பட்டதால் நிர்வாகத்தின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டும், 3 நாட்கள் கழிக்கப்பட்டது என்பதாக தெரிவிக்கப்பட்டது. சங்க உறுப்பினர் தன்னுடைய குறுக்கு விசாரணையின் போது மற்ற ஓட்டுநர்களுக்கெல்லாம் 30 நாட்கள் சம்பளம் கொடுத்துவிட்டு, எங்களுக்கு மட்டும் 3 நாட்கள் ஈட்டிய விடுப்பு

கழித்துக் கொண்டார்கள் என சாட்சியம் அளித்துள்ளார். நிர்வாகத்தின் வருமானத்தை கருத்தில் கொண்டும் அரசாங்கத்தின் நிதிச்சுமையை கருத்தில் கொண்டும் எவ்வித அறிவிப்பும் இன்றி, சங்க உறுப்பினரின் விடுப்புக் கணக்கிலிருந்து 3 நாட்கள் நிர்வாகம் தன்னிச்சையாக கழித்துக் கொண்டது இயற்கை நியதிக்கும், தொழிற்தகராறு சட்டம் பிரிவு 9Aக்கு புறம்பானது எனவும் முடிவு செய்து மனுதாரரின் கோரிக்கை மனு நியாயமானதுதான் என்பதாக தீர்மானிக்கிறேன்.

முடிவில், தமிழக அரசாணை (டி) எண்.211 – தொழிலாளர் மற்று வேலைவாய்ப்பு (டி1) துறை நாள்.15.03.2024ன் கீழ் எழுப்பப்பட்ட எழுவினாவிற்கு கீழ்கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது.

1. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை லிமிடெட்) கோவை என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் திரு.R.மதுரைவீரன், ஓட்டுநருக்கு (பணி எண்.சி29136) ஜுன் 2020ம் மாதம் சம்பள சிலிப்பில் 03 நாட்கள் ஊதியமில்லா

விடுப்பு நாட்களை சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாட்கள் ஊதியத்தை திரும்ப வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதான் என்றும்,

2. ஏற்கனவே சங்க உறுப்பினர் ஜுன் 2020 மாதத்திற்கான முழுச்சம்பளமும் பெற்றுவிட்டபடியால் சங்க உறுப்பினர் மனுதாரர் திரு.R.மதுரைவீரன், ஒட்டுநருக்கு பிடித்தம் செய்த 3 நாட்கள் ஈட்டிய விடுப்பை சிறப்பு விடுப்பாக கருதி, அந்த 3 நாட்கள் விடுப்பினை மீண்டும் அவரின் விடுப்பு கணக்கில் சேர்க்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

3. வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு செலவுத் தொகையை குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

(இந்த தீர்வம் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம்

செய்யப்பட்டு இன்று 2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 7ம் நாள் என்னால் நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.)

LATHA A P Digitally signed by LATHA A P Date: 2026.04.07 11:29:52 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்** :

தொ.சா.1 - திரு.R.மதுரைவீரன்.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்** :

- இல்லை -

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.1 | 08.03.2022 | ந.க.எண்.618/2020ன் சமரச முறிவறிக்கை. | அசல் |
| தொ.சா.ஆ.2 | 03.08.2020 | மனுதாரர் சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பிய கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.3 | ஜுன் 2020 | சங்க உறுப்பினரின் ஜுன் மாதம் 2020ன் சம்பள ரசீது. | நகல் |
| தொ.சா.ஆ.4 | 30.09.2020 | மனுதாரர் சங்கம் கோவை, தொழிலாளர் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | அலவலர் முன்பாக தாக்க செய்த 2(கே)ன் மனு ந.க.எண்.618/2020. | |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| நி.சா.ஆ.1 | 17.06.2020 | அரசாணை எண்.G.O.304. | நகல் |
| நி.சா.ஆ.2 | 16.05.2020 | சுற்றறிக்கை. | நகல் |

LATHA A P Digitally signed by LATHA A P Date: 2026.04.07 11:30:00 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.

Copy of Fair/Draft Order in
ID No.72/2025,
Date : 07.04.2026.
PLC, CBE.